1981 ஏப்ரல் 6]

மாவட்டத் தலைமையிடங்களில் பெண்களுக்கான தனி தொழிற் பயிற்சி பயிலகங்கள்.

வினா எண் 654—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டத் தலைமை இடங்களில் பெண்களுக்கென தனி பாலிடெக்னிக்குகள் ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:—(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது, 5 பாலிடெக்னிக்குகளுக்குப் பதிலாக 6 ஆரம்பிக்கப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். அதே நேரத்தில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பெண்களைப் பொறுத்த வரையில் எந்தவிதத் தொழில் நுட்பக் கல்விக்கும் வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே, இதையே ஒரு கோரிக்கையா ஏற்றுக்கொண்டு பாலிடெக்னிக்குகளை அந்த மாவட்டங்களில் ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நிறுவனங்கள் பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை, தொழில் நுட்பக் கல்வி சம்பந்தப்பட்ட வாரியம் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறதே தவிர, அவைகளை அரசு சார்பாகத் தொடங்கப் போகிறோம் என்ற அடிப்படையில் சொல்லவில்லை.

அதற்கு அடுத்து அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், புதுக்கோட்டையில் ஒன்றும், நீலகிரியில் ஒன்றும் ஆக இரண்டு பாலிடெக்னிக்குகளை ஆரம்பிப்பதாக இருக்கிறோம். அதற்குப் பிறகுதான், அரசுத் துறையில் பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க வேறு எந்த இடத்திலே ஆரம்பிப்பதாக இருந்தாலும் அதைப் பற்றிய ஆலோசனை எடுக்கவிருக்கிறோம். ஏனென்றால் அந்த இரண்டு மாவட்டங்களிலும் ஒரு பாலிடெக்னிக்குகள் கூட இல்லை என்ற காரணத்தால் அரசு அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

[1981 ஏப்ரல் 6

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு மறுமுறையும் நினைவூட்டுகிறேன். திருநெல்வேலி மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் எந்தவித பாலிடெக்னிக்குகளும் பெண்களுக்கென்று இல்லை. இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து, சங்கர் பாலிடெக்னிக் என்று ஆண்களுக்கு மட்டுமே ஒன்றுதான் இருக்கிறது. பெண்களுக்குகென்று எந்த வித வழியும் இல்லை. ஆகவே அரசின் முயற்சியிலோ, அல்லது தனியார்களின் முயற்சியிலோ, எந்த வகையிலாவது பெண்களுக்கென்று தனியார் பாலிடெக்னிக்கை அந்த மாவட்டங்களில் ஏற்படுத்த அரசு முயற்சிசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்த வரையில், தொழில் நுட்பக் கல்வி, தொழிற்கல்வி போன்றவைகள் பரவலாக மாணவர்களுக்குத் தரப்படவேண்டும் என்று கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதன் விளைவாக இன்று கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பல மாறுதல்களை அனைவரும் அறிவார்கள். சென்ற ஆண்டு இதுவரையில், இல்லாத வகையில், 5 பாலிடெக்னிக்குகளை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. சாதாரணமான கலைக் கல்லூரி பட்டங்களைத் தருவதினால் மாணவர்களுக்கும் நாட்டிற்கும் பயன் இல்லை என்ற காரணத்தினால்தான், தொழில் கல்வியை வளர்க்க அரசாங்கம் பெரு முயற்சி செய்து கொண்டு வருகிறது. இந்தப் பாலிடெக்னிக்குகளைப் பொறுத்த மட்டில் தனியார் நிறுவனங்கள் முன் வந்தாலும் அதை நாங்கள் பரிசீலிக்கிறோம். அப்படிப்பட்ட நிறுவனங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாவட்டங்களிலிருந்து வருமேயானால் அவர்களுடைய கோரிக்கைகள் முறையாகப் பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 9-30]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: நமது அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து பல பாலிடெக்னிக்குகள் பெண்களுக்காக அமைத்திருப்பதாக அறிவித்தார்கள். இருந்தாலும் இன்றைய சூழ்நிலையில் பி.ஏ., எம்.ஏ., படித்து விட்டு பி.யு.சி., எஸ்.எஸ்.எல்.சி., படித்துவிட்டு நல்ல மார்க்கு வாங்கியிருக்கக்கூடிய பெண்கள் கூட வேலையில்லாமல், ஒரு தொழிலும் செய்யமுடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு, வாழ்க்கை நடத்த முடியாது தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பெண்களுக்குத் தனியாக பால்டெக்னிக்குகள் ஆரம்பிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு எப்படி வேலைவாய்ப்பு அளிக்கலாம் என்பது பற்றியும் ஆராய்ந்து ஒரு புதிய முறையை அரசாங்கம் உருவாக்குமா?

1981 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெண்களுக்கு தொழில் நுட்பக் கல்வி தரவேண்டும் என்பதை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதன் விளைவாகத்தான் நாகப்பட்டிணத்தில் இருக்கிற பாலிடெக்னிக்கில் தனியாகப் பெண்களுக்கு ஒரு விங் ஆரம்பித்திருக்கிறோம், தூத்துக்குடியிலும் தனியாக ஒரு விங் ஆரம்பித்திருக்கிறோம். தஞ்சையில் தனியாக மகளிர் பாலிடெக்னிக் சென்ற ஆண்டு ஆரம்பித்திருக்கிறோம். கோவையில் பெரியநாயக்கன் பாளையத்தில் பெண்களுக்கு ஒரு பாலிடெக்னிக் ஆரம்பித்திருக்கிறோம். ஆரம்ப்பிக்கப்பட்ட பாலிடெக்னிக்கில் பெண்கள் சேர்க்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வருகிறோம். பயன் உள்ள கல்வியைத் தருவதில் இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை தொடர்ந்து எடுக்கும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : அமைச்சரவர்களின் பதிலில் தமிழ்நாட்டில் புதிதாக நிறுவப்படுகிற தொழில் நுட்பக் கல்லூரிகள் அறக்கட்டளைகள் மூலம் நிறுவப்படுகின்றன என்று அறிவித்தார்கள். ஏற்கனவே தனியார் நிறுவியிருக்கிற அறக்கட்டளைகள் மூலம் செயல்படுகிற இந்தத் தொழில் நுட்பக் கல்லூரிகள் சரிவர இயங்கவில்லை அவை இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கின்றன. அரசாங்கமும் தன்னிச்சையாக செயல்படமுடியாமல் தனியாரும் தன்னிச்சையாக செயல்படமுடியாமல் மந்த நிலையில் இருக்கின்றன. ஆகவே அரசு துரித நடவடிக்கைகள் எடுத்து அரசே ஏற்று நடத்தவோ அல்லது தனியாரிடத்தில் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் துண்டித்துக்கொள்ளவோ தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீர்காழியில் இருக்கிற பாலிடெக்னிக்கை மனதில் வைத்துக்கொண்டு தமிழ்நாடு பூராவும் அப்படி இருப்பதுபோல் ஒரு உணர்வை வைத்துக்கொண்டு கேள்வி கேட்டிருக்கிறார்கள். தனியார் நிறுவனங்கள் என்று வருகிற போது பாலிடெக்னிக்ஸ், என்ஜினீயரிங் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் அவை ஏறக்குறைய அரசாங்கக் கட்டுப்பாட்டுடன், நம் கொள்கைப்படி, கவர்னிங் கவுன்சில் என்று வைத்துக் கொண்டு அதிலே அரசாங்கப் பிரதிநிதியை வைத்துக்கொண்டு அந்த கவர்னிங் கவுன்சில்தான் அந்த நிறுவனத்தை நிர்வகிக்கக் கூடியது. மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதாக இருந்தாலும் கூட என்ஜினியரிங் கல்லூரியைப் பொறுத்தவரையில் 100 க்கு 100 நாமேதான் செலக்ட் செய்கிறோம். அவர்களுக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. கோடிக்கணக்கான ரூபாய் போட்டிருக்கிற அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பக் குழந்தைகளுக்கும் கூட ஒரு ஸீட் கொடுக்க முடியாது. ஆனால் பாலிடெக்னிக்குகளைப் பொறுத்தவரையில் 10 சதவீதம்

அவர்களுக்காகத் தந்திருக்கிறோம். 90 சதவீதம் நம்முடைய கொள்கை அடிப்படையில்தான் அங்கே அனுமதி அளிக்கப் படுகிறது. ஆகவே ஏறக்குறைய இவைகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய பெருமளவு கட்டுப்பாட்டில்தான் இருந்து வருகின்றன. சீர்காழி பாலிடெக்னிக்கைப் பொறுத்தவரையில் அதன் பிரச்சினையை அரசு தனியாகக் கவனித்து அதற்கான தீர்வை காணும்.

திரு. இரா. கருப்பையா: திருச்சியில் பெண்களுக்கென பாலிடெக்னிக்கில் ஒரு தனிப்பிரிவு இந்த ஆண்டு ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அது குறித்து ஆராய்வோம்.

திருநெல்வேலி-பாபநாசம் மின் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை.

*வினா எண் 655—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதிக்குட்பட்ட பாபநாசம் லோயர் கேம்பில் இருக்கும் மின்தொழிலாளர்களுக்காக நடை பெறும் கூட்டுறவு பண்டகசாலையில் சுமார் ரூ. 32 ஆயிரத்துக்கு மேல் கையாடல் நடைபெற்றுள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) பண்டகசாலையில் 1977—78-ல் ரூ. 1202.41-ம், 1978—79-ல் ரூ. 3533.53-ம் ஆக மொத்தம் ரூ. 4735.94 கையாடல் செய்யப்பட்டிருப்பதாகக் கூட்டுறவுச் சட்டப்பிரிவு 65-ன் கீழ் நடந்த விசாரணையின் போது தெரியவந்தது.

(ஆ) பண்டகசாலையின் கணக்கர் திரு. பி. ஆவுடையப்பன் என்பவரும், பாபநாசம் மின் திட்ட கோட்டப் பொறியாளர் அலுவலக காசாளர் திரு. கே. கணபதி என்பவரும் இக்கையா டலில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும், கடன் விற்பனை தொகை வசூலை முழுவதுமாக பண்டகசாலைக் கணக்கில் வரவு வைக் காது, கையாடல் செய்திருப்பதாகவும் விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளார்.